VEDABHARATHI SEITHIGAL (Tamil Monthly Magazine)
REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020






தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜூவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி,
திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார்
கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

Printed Matter


If not delivered please return to
VEDABHARATHY
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.

# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

| மலர்:3 | இதழ்:11 | ஆகஸ்ட்:2019 | ரூ.10/– | வருட சந்தா:ரூ.100/– |
|---|---|---|---|---|
| Volume:3 | Issue:11 | August:2019 | Rs.10/- | Annual Subs: Rs.100/- |



# ஸ்ரீ மஹா மேரு மண்டலி

81/1, மன்னப்பன் தெரு,
கோட்டூர், சென்னை – 600 085.

**போன்: 044 – 2447 4744**


## குரு பூர்ணிமா





குரு பூர்ணிமா விழா 16.07.2019 நடைபெற்றது.
அதன் கட்டுரை புத்தகத்தின் உள்ளே.....




# இமைப் பொழுதில் கண் முன் உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்ப்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB
TRUST AND EXCELLENCE
SINCE 1904

**சிட்டி யூனியன் பேங்க்**

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street,
Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 94450 73431, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம் அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்

## இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

## இந்த அறக்கட்டளையின் நோக்கம்


1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

***DONATE LIBERALLY TOWARDS CORPUS FUND***



Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**



# வருந்துகிறோம்

*து : கேஷ்வனுத்விக்னமனோ: ஸுகேஷு விகதஸ்ப்ருஹ:/*
*வீதராகபயக்ரோத: ஸ்திததீர் முனிருச்யதே*

*(கீதை 2-56)*

வேதபாரதியின் ஆன்மீக குருவும், வழிகாட்டியுமான **பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் 29.07.2019 - திங்கட்கிழமை விடியற்காலை 1.00 மணிக்கு முக்தி அடைந்தார்** என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவருடைய மறைவு நம்மை எல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அவர் தம்முடைய இறுதி மூச்சுவரை அறநெறிகளைக் கடைபிடித்து ஸ்திதப்ரஜ்ஞனாக வாழ்ந்தார்.

உடல் அழிக்கப்படும் போதும் ஆவி அழிக்கப்படுவதில்லை. அவருடைய ஆன்மா நம்மை வழிநடத்தும். அருட்குருநாதரின் திருவடிகளைப் போற்றி வணங்குவோம்.

-ஆசிரியர்.

# வேதபாரதி செய்திகள்
(ஆன்மீக மாத இதழ்)

மலர்: 3 இதழ்: 11

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை,
கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.



**புத்தகக் குழு :**

**ஸ்ரீ டி. சூரியநாராயணன்**
**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**
**ஸ்ரீமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலி**
**ஸ்ரீ ஸ்ரீகாந்தன்,**
**ஸ்ரீ சௌந்தரராஜன்,**
**ஸ்ரீ விஸ்வநாதன்**
**ஸ்ரீ ஸ்ரீநிவாசன்,**
**வேளச்சேரி ஸ்ரீ நடராஜன்,**
**ஸ்ரீ ஸ்வாமிநாதன்,**
**நங்கநல்லூர் ஸ்ரீ விஸ்வநாதன்,**
**ஸ்ரீ மணிசங்கர்**



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**



**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**
**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/19-20 /**
**Valid from 28.02.2019 to 31.12.2020**


## புத்தகத்தின் உள்ளே


ஒரு நிமிடம் உங்களோடு 5
ஆகஸ்ட் மாத விசேஷங்கள் 6
மஹா பெரியவாளும் ஔவையாரும் 7
வேதபாரதியும் ஔவைவிழாவும் 8
திகைக்க வைத்த திருப்பூர் 10
பிக்ஷாவந்தனம் 13
பெற்றோர்களே கவனியுங்கள் 15
சிருங்கேரி ஜகத்குரு மகா ஸ்வாமிகள் அருளியவை 17
ஸ்ரீமத் பகவத்கீதை 23
சுபாஷிதம் 27
தர்மத்தின் குரல் 28
ஸந்த்யாவந்தன பயிலரங்கம் 30
போஜன நியமங்கள் 31
புதுச்சேரி வேதபாரதியின் சாதனை முயற்சி 33



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.100 |
| ஆயுள் சந்தா | ரூ.1500 |

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும்.
சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா
நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

புத்தக வடிவமைப்பு
**ரெம்ஸ் பிரிண்டர்ஸ்**
1, லட்சுமிநகர்,
100 அடி சாலை, வேளச்சேரி,
சென்னை - 42. செல்: 8939000064




## ஒரு நிமிடம் உங்களோடு!

*அன்புள்ள வாசகர்களுக்கு வணக்கங்கள் :*

எல்லோரும் எல்லா வளமும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

இந்த மாதம் இரண்டு முக்கிய செய்திகளுடனும், விண்ணப்பத்துடனும் சந்திக்கிறோம்.

முதலாவதாக இது மஹான்களின் சாதுர்மாஸ்ய விரத காலம். நாம் எல்லோரும் நம் குருநாதர்களை தரிசனம் செய்து காணிக்கைகள், பிட்சாவந்தணம் சமர்ப்பணம் செய்து குரு அருளைப் பெற வேண்டுகிறோம். நாம் நம் வீட்டில் நடக்கும் திருமணங்களில், சுப காரியங்களில் நம் குருநாதர்களின் ஆசிகளுடன் என்று எழுதித்தான் பத்திரிகை எழுதுகிறோம். நாம் தற்போது செய்கின்ற குருவந்தனத்தை நம் அடுத்த தலைமுறை பின்பற்றுவார்கள் என்பது உறுதி. நம் நாட்டில் குருபூர்ணிமா ஒட்டி வருகின்ற சாதுர் மாஸ்ய விரத காலங்களில் நாம் நம் குடும்பத்துடன் சென்று குருநாதர்களின் பாதம் பணிவோம்!!! ஆசீர்வாதம் பெறுவோம்.

**இரண்டாவது செய்தி :**

இன்னும் 2 மாதங்களில் இந்துக்கள் பண்டிகையில் மிக முக்கியமான தீபாவளிப் பண்டிகை வருகிறது. நம் வேதபாரதி செய்திகள் பத்திரிகை சென்று சேருவோரில் அதிகமானவர்கள் கிராமங்களை விட்டு நகரத்திற்கு வந்தவர்கள். நம் கிராமத்தில் உள்ள குலதெய்வ கோவில், கிராம தேவதைகள், அர்ச்சகர்கள், பூசாரி எல்லோரும் நம்முடன் உரிமை உள்ளவர்கள். நூற்றாண்டு கால பந்தம் உள்ளவர்கள். நம் மூதாதையர்கள் வாழ்ந்த மண். நம் உணர்வுகளில் இழையோடும் நம் கிராமம், நஞ்சையும்,புஞ்சையும் கொஞ்சி விளையாடிய கிராமங்களில் நாம் சிறுவயதில் இருந்திருக்கலாம். அல்லது நம் முன்னோர்கள் அந்த சூழ்நிலையை அனுபவித்திருக்கலாம். நாம் நினைவு கொண்டு நம் ஊரில் உள்ள ஸ்வாமி, அம்பாள், கிராம தேவதைகள், பூசாரி, ஊழியர்கள், கோசாலை ஊழியர்கள் அவர்களை நினைவில் வைத்து நாம் ஏதோ விதத்தில் பண்டிகைக்கு புது துணிகள், பட்டாசுகள் பணம் கொடுத்து நம்

அன்பை பகிர்வோம். நம் வாசகர்கள் மிகுந்த விஷயம் தெரிந்தவர்கள். மிகவும் பாரம்பர்யம் தெரிந்தவர்கள், எனினும் இந்த செய்தியின் வாயிலாக நம் வாசகர்களின் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் நம் கருத்து சென்றடையவே இந்த வேண்டுகோள்.

என்றும் அன்புள்ள ஆசிரியர்.

---

## ஆகஸ்ட் மாத விசேஷங்கள்
### (ஆகஸ்ட் 1/2019 முதல் ஆகஸ்ட் 31/2019 வரை)

| தேதி | கிழமை | விசேஷம் |
|---|---|---|
| 3 | சனி | ஆடிப்பெருக்கு |
| 4 | ஞாயிறு | சதுர்த்தி விரதம் |
| 6 | செவ்வாய் | சஷ்டி விரதம் |
| 9 | வெள்ளி | வரலட்சுமி விரதம் |
| 11 | ஞாயிறு | எகாதசி |
| 12 | திங்கள் | பிரதோஷம் |
| 15 | வியாழன் | ருக், யஜுர், உபாகர்மா, சுதந்திர தினம் |
| 16 | வெள்ளி | காயத்ரி ஜபம், ஶ்ரீஶ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஜெயந்தி, சபரிமலை நடை திறப்பு |
| 19 | திங்கள் | மஹா சங்கடஹர சதுர்த்தி |
| 21 | புதன் | சபரிமலை நடை அடைப்பு |
| 23 | வெள்ளி | ஜன்மாஷ்டமி |
| 26 | திங்கள் | ஏகாதசி |
| 28 | புதன் | பிரதோஷம் |
| 30 | வெள்ளி | அமாவாசை |

16.08.2019 அன்று வேளச்சேரி ஶ்ரீ கணபதி சச்சிதானந்த ஆசிரமத்தில் காயத்ரி ஜபமும், சகஸ்ர காயத்ரி ஹோமமும் நடத்த ஏற்பாடாகி உள்ளது. விருப்பம் உள்ள அந்தணப்பெருமக்கள் கலந்து கொண்டு வேதமாதாவின் அனுக்கிரஹம் பெற அன்புடன் அழைக்கிறோம். முன்பதிவு அவசியம்.

**தொடர்புக்கு : 8667416781 / 9443495950**





## மஹா பெரியவாளும் ஔவையாரும்



ஒரு நாள் மஹா பெரியவாளை தர்ஸனம் செய்வதற்கு ஒரு தம்பதிகள் தங்களுடைய ஐந்து வயது குழந்தையோடு காஞ்சிபுரம் மடத்திற்கு வந்திருந்தார்கள். நல்ல கூட்டம். வரிசையில் காத்திருந்தார்கள். அருகில் வந்ததும், அவர்கள் குழந்தையுடன் பெரியவாளை நமஸ்காரம் பண்ணி "பெரியவா குழந்தைக்கு விஜயதஸமியன்னிக்கி அக்ஷராப்யாஸம் பண்ணணும், கொழந்த நன்னா படிச்சு நன்னா வரணும் அதுக்கு பெரியவா அனுக்ரஹம் பண்ணணும்" என்று பிரார்த்தித்துக் கொண்டார்கள். அந்த குழந்தை தன்னுடய அப்பா அம்மாவைப் போல் இரண்டு கைகளையும் கூப்பிக்கொண்டு மஹா பெரியவாளையும் தன் அப்பா அம்மாவையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தது.

மஹா பெரியவா குழந்தையைத் தன் அருகில் அழைத்து மிக்க அன்புடன் - நான் உனக்கு ஒரு பிள்ளையார் பாட்டு சொல்லித்தரேன் சொல்றையா? என்று கேட்டார். குழந்தை "கத்துக்கறேன் என்று தலையை ஆட்டியது. அங்கு கூடியிருந்தவர்கள் மஹாபெரியவா "மூஷிக வாஹன மோதக ஹஸ்த" என்ற ஸ்லோகத்தைத்தான் சொல்லிக் கொடுப்பார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் மஹா பெரியவா ஔவையார் இயற்றிய "மூதுரை"யின் முதல் பாடலான கீழ்க்கண்ட கடவுள் வாழ்த்துப் பாடலை வார்த்தை வார்த்தையாக சொல்ல குழந்தையும் தன்னுடைய மழலைச் சொல்லில் அழகாக திருப்பிச் சொன்னது.

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு"

பெரியவா குழந்தையை ஆசீர்வாதம் பண்ணி - இது ஔவைப் பாட்டி பாடினது தெரியுமோ? தெனமும் இதைச் சொல்லு நன்னா படிப்பே என்றார். குழந்தையும் "சரி தாத்தா" என்றது.

அங்கு குடியிருந்தவர்களுக்கு ஏக சந்தோஷம்.

இந்த அழகான அர்த்தமுள்ள ஸ்லோகத்தை குழந்தைகளும் பெரியவர்களும் தினமும் சொல்லிவந்தால் மனசும் அதனால் வாக்கும் சுத்தமாகும். தெளிந்த நல்லறிவும் உண்டாகும்.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

## "வேதபாரதியும் ஔவைவிழாவும்"

வேதபாரதி நடத்தும் "ஔவை விழா" பல ஆண்டுகளாக சீரோடும் சிறப்போடும் ஸ்ரீ சங்கரா எஜிகேஷனல் ட்ரஸ்ட் மூலம் நடந்து வருகிறது. இந்த விழா நடந்திட காரண கர்த்தாவாகிய ஸ்ரீமான் வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்களுக்கு பெருமையை சமர்ப்பிக்கிறோம். ஸ்ரீமான் வேம்பத்தூர் கிருஷ்ணன் தனது வாழ்நாள் முழுவதும் ஔவைப் பாட்டியின் ஆத்திசூடி கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, விநாயகர் அகவல் ஆகிய நன்னெறி நூல்கள் பிரசுரம் செய்து விநியோகம் செய்து வாழ்நாள் சாதனையாளராக திகழ்ந்தவர். பல்வேறு விருதுகள் பெற்று, தனிநபர் சாதனையாக தள்ளாத வயதிலும் தனது வாழ்நாள் கனவாக ஔவைக்கு கோவில் கட்ட வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொண்டவர், அவர் கனவை ஸ்ரீ வேம்பத்தூர் கிருஷ்ணன் தான் பெரிதும் மரியாதை வைத்திருந்த மாதுஸ்ரீ பிரேமா கிருஷ்ணமூர்த்தி சாஸ்தரிகள் அவர்களிடம் எடுத்துச் சொன்னார்கள். மாதுஸ்ரீ பிரேமா அம்மா அவர்கள் செய்து கொண்டுள்ள பல்வேறு கிராமப்புற அறப்பணிகளில் நடுவே ஸ்ரீ வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்களிடம் ஔவையார் அருளிய பல்வேறு புத்தகங்களை பணம் கொடுத்து வாங்கி எல்லா பள்ளிகளுக்கும் கொடுக்கும் பேறு பெற்றார்கள்.

ஸ்ரீமதி பிரேமா அம்மா அவர்கள் வேதபாரதி நிர்வாகிகளை அணுகி ஸ்ரீ வேம்பத்தூர் கிருஷ்ணன் கனவு நினைவு ஆகவேண்டும் எனவும், அதற்கு வேதபாரதி துணை நிற்க வேண்டும் எனவும் அருளாணையிட்டார்கள். நூல்களை பல்லாயிரக்கணக்கான குழந்தைகளுக்கு கொண்டு போய் சேர்க்க வேண்டும். எனவும் ஔவைப் பாட்டிக்கு கோவில் கட்டும் அளவிற்கு சூழ்நிலை இல்லை எனவும் கூறி, அந்த ஆண்டே ஸ்ரீ சங்கராஎஜீகேஷனல் ட்ரஸ்ட் செயலாளர் ஸ்ரீமான் ராமகிருஷ்ணன் சார் அவர்கள் உதவியோடு ஆத்திசூடி, கொன்றை வேந்தன் எல்லா பள்ளி சிறார், சிறுமியர்களுக்கு வழங்கி நன்கு ஒப்புவிக்கும் குழந்தைகளுக்கு மாதுஸ்ரீ பிரேமா



அம்மா அவர்களும், ஸ்ரீ வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்கள் கரங்களாலும் பரிசுகளும், பாராட்டும் வழங்கப்பட்டது. மேலும் ஓர் ஆச்சர்யம் என்னவெனில் தாம்பரம் ஸ்ரீ வள்ளுவர் குருகுலம் பள்ளியில் பராமரிப்பு, அபிவிருத்தி பணிகள் நடைபெறுவதையும் பள்ளி நிர்வாகம் மிகுந்த தேசப்பற்று மிகுந்தவர்கள் என்று ஸ்ரீமதி பிரேமா மாமி அவர்களிடம் தெரிவித்து வள்ளுவர் குருகுலத்தை தொடர்பு கொள்ள கேட்டுக்கொண்டோம், ஸ்ரீமதி பிரேமா மாமி அவர்களும் வள்ளுவர் குருகுலத்தை தொடர்புகொண்டு ஔவைப்பாட்டிக்கு சிலை வைக்க ஏற்பாடு செய்தார்கள். அம்மாவின் சிறந்த முயற்சியின் பலனாக வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்கள் கனவும் நிறைவேறி தற்போது தாம்பரம் வள்ளுவர்; குருகுல வளாகத்தில் ஔவைப்பாட்டி குழந்தைகளை ஆசீர்வதிக்கிறார். ஸ்ரீ வேம்பத்தூர் கிருஷ்ணன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

தொகுப்பு : **வேதபாரதி**

---

### வாசகர் கடிதம்

பெற்றோர்களே கவனியுங்கள் (குழந்தை வளர்ப்பு) பகுதி தொடர் தற்கால குழந்தைகளை கவனிக்க ஒரு வரப்ரசாதமாக விளங்குகிறது. பிரதக்ஷிணம் பகுதியில் சொல்லும் திருக்கோயில் போன் நம்பரை வெளியிட்டால் பயனுள்ளதாக இருக்கும்.

*- ஆர்.கல்யாண சுந்தரம், சென்னை - 127.*

---

வேதபாரதி செய்திகள் ஜுலை 2019 இதழ் படித்தேன். பல நல்ல தகவல்கள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக பூ சூடல் பற்றிய குறிப்புகள் எங்கு, யாரிடம், எப்படி வாங்க வேண்டுமென்பது முதல் எப்படிச் சூடிக்கொள்ள வேண்டும் என்பது வரை பயனுள்ளவை. குல தெய்வம், தமிழ் மாத பெயர், தர்மத்தின் குரல் பகுதியில் கர்மா பற்றிய விளக்கம் அனைத்தும் அருமை. அடுத்தபடி முக்கியமாக டாக்டர். திருமதி.ஷ்யாமா அவர்களின் கட்டுரை நெகிழ வைத்தது. சடையாண்டி போல ஆழமான பக்தி செய்ய எனக்கும் மஹா பெரியவா அருள் புரிய வேண்டும்.

சற்றே நீளமான பதிவு. மன்னிக்கவும் நன்றி

## திகைக்க வைத்த திருப்பூர்

ஜுன் 29, 30 தேதிகளில் திருப்பூரில் வேதபாரதியின் (யுவஸ்ரீ) வாழ்வியல் பயிலரங்கம் சிறப்பாக நடந்தேறியது. 29ம் தேதி முழுவதும் திருப்பூரில் மாபெரும் கல்வி ஸ்தாபனமான விவேகானந்தா அகடமியின் வளாகத்தில் ஏறபாடாகி இருந்தது. இந்த யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம் முழுவதும் பெற்றோர்களுக்காகவும் ஸ்தாபனத்தின் ஆசிரியர் பெருமக்களுக்காகவும் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எல்.கே.ஜி.யிலிருந்து 8வது வகுப்புக் குழந்தைகளின் பெற்றோர்கள் வரையில் ஒரு பிரிவு, 9ம் வகுப்பிலிருந்து +2 வகுப்புக் குழந்தைகளின் பெற்றோர்கள் வரையில் ஒரு பிரிவு என பிரிக்கப்பட்டு, காலை முதல் மதிய உணவு வரை தொடர்ந்து வகுப்புக்கள் நடத்தப்பட்டன. திருமதி. காந்தலட்சுமி, திருமதி. காந்தாமணி நாராயணன், டாக்டர்.ஷ்யாமா ஆகிய மூவரும் இந்த வகுப்புக்களை எடுத்தனர். நிறுவனத்தின் சேர்மன் மற்றும் தலைமைப் பொறுப்பாசிரியர் திரு.பத்மநாபன் ஆகியோர் முன்கூட்டியே மின் அஞ்சல்கள் மூலம், கலந்து முடிவு செய்து பிரத்தியேகமான தலைப்புகளில் வகுப்புக்கள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு வகுப்பின் இறுதிப் பகுதியில் கேள்வி, பதில்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

வகுப்புக்கள் அனைத்திலும் அகடமியின் சேர்மன் அவர்களும், தலைமை ஆசிரியரும் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் அனைவரும் கூடவே இருந்து மிகவும் கவனமாகக் கேட்டு, பின் பதிவு செய்தது எங்களுக்கு மிகுந்த ஆச்சர்யத்தைக் கொடுத்தது. அவர்களின் அன்பும், அக்கறையும் அதீத கவனிப்பும், விருந்தோம்பலும் பற்றி சொல்லி மாளாது. வேதபாரதியின் தலைவர் திரு. வெங்கட்ராமன் அவர்களும் மிகப் பொறுமையாக வகுப்புகளில் அமர்ந்திருந்தது விசேஷ ஆச்சர்யம். முன்கூட்டியே திருப்பூர் சென்று மிகச் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தது மிகவும் பாராட்டுக்குரியது.



மதிய உணவிற்குப் பிந்தைய இரண்டு மணி நேர வகுப்புகள், அகடமியின் ஆசிரியைகளுக்கு மட்டுமே ஏற்பாடாகியிருந்தது. ஐம்பது ஆசிரியைகள் இந்த வகுப்புகளிலும், சேர்மன் அவர்களும் தலைமை ஆசிரியரும் பங்கேற்று மிகவும் கவனமுடன் எங்களின் உரையாற்றலை கேட்டனர். அகடமியின் ஆசிரியப் பெண்மணிகள் வகுப்புகளை மிகுந்த ஆர்வத்துடன் கேட்டதுடன், ஆக்கபூர்வமான, அறிவு பூர்வமான கேள்விகளை அர்ஜுனனின் அம்புகள் போல் தொடுத்தார்கள். அதுவும் அழகிய ஆங்கிலத்தில் அனைவரிடமும் பிரகாசித்த அறிவுச் சுடரொளியை அவர்கள் பேசும்போது எங்களால் உணரமுடிந்தது. இறைவன் அருளால் சரஸ்வதி கடாக்ஷம் நிறைந்துள்ள இந்த ஸ்தாபனம் மேன்மேலும் பல குடும்பங்களுள் ஞானச்சுடரை ஏற்றி வைக்க வேண்டும் என்ற பிரார்த்தனை செய்து கொண்டு விடை பெற்றோம்.

அகடமியின் மாணவிகளுக்கான யுவஸ்ரீ வகுப்புக்கள் வெகு விரைவிலேயே ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

மறுநாள் வேதபாரதியின் வாழ்வியல் பயிலரங்கத்தை, சேம்பர் ஹால் எனும் திருமண மண்டபத்தில் வடிவமைத்து, நடத்திய பொறுப்பு, முழுக்க முழுக்க திருச்சி யோகா சந்திரசேகர் அவர்களையே சேரும். பெற்றோர்கள், சிறு வகுப்பு மாணவிகள், உயர்வகுப்பு மாணவிகள் என்று பிரித்தருந்தனர். திருப்பூர் வணிகப் பெருமக்கள் பலரும் பெற்றோர்களாக பங்கேற்றிருந்தனர். பெண் குழந்தைகள் பற்றிய பாதுகாப்பு விழிப்புணர்வு இவர்களிடம் மேன்மையாகவே காணப்பட்டது என்றே தோன்றியது.

யுவஸ்ரீ வகுப்பு பெண்குழந்தைகளிடம் சமூகப் பிரச்சினைகள், தங்களின் சுய பாதுகாப்பு, குடும்ப கௌரவம், வீட்டுப் பெரியோர்களிடம் மரியாதை போன்ற விஷயங்களில் நல்ல விழிப்புணர்வு இருப்பதாகவே பட்டது. இதற்குக் காரணம் ஒற்றுமையான குடும்பங்கள், கூட்டுக் குடும்ப முறைகள். சமூக

ஒற்றுமை ஆகியவை அங்கே, ஓங்கியிருப்பதால் தான் என்று தோன்றுகிறது. இவையெல்லாம் அவர்களுடன் இருந்த ஒரு சில மணிநேரங்களில் கவனித்தேன். கணிப்புத்தான் மாற்றுக் கருத்துக்கள் இருக்கக் கூடும்.

வரவேற்பும், விருந்தோம்பலும், விடையனுப்புதலும் திருமண ஏற்பாடு போல் அமர்களப்பட்டது. அனைவருமே மனப்பூர்வமாக பழகிய விதம், நகரத்தில் காணக் கிடைக்காததாகவே இருந்தது. வேதபாரதி யுவஸ்ரீ-யின் ஸ்தாபகர் ஆடிட்டர்.திரு.ராமநாதன் அவர்கள் அமைதியாகக் கலந்து கொண்டது வேதபாரதிக்குப் பெருமை.



நூற்றுக்கும் மேற்பட்ட பெற்றோர்கள், நூற்றி நாற்பதுக்கும் மேற்பட்ட பெண்குழந்தைகள், யோகா சந்திரசேகர் தவிர, ஏழு ஆசிரியைகள் - திறம்பட சமாளித்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். யுவஸ்ரீ வகுப்புக்களை எடுப்பதில் ஆர்வம் மிகுந்த, புதிய முகங்களான திருமதி.வித்யா, திருமதி.திவ்யா, ஸ்ரீவித்யா, திருமதி.சிவசங்கரி மற்றும் மயிலையை சேர்ந்த செல்வி.யுவராணி ஆகியோரும் பயிலரங்க வகுப்புக்களை அவரவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த தலைப்புக்களில் எடுத்தார்கள். மொத்தத்தில் வியக்கவும் திகைக்கவும் வைத்தது திருப்பூர் வாழ்வியல் பயிலரங்கம்.

**- டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**



## பிக்ஷாவந்தனம்

முப்பத்திரண்டு அறங்களுள் மக்களுக்கு உணவிடுதல் - அன்னதானம் மிகவுயர்ந்த அறமாகும். இதனால் கிடைக்கும் பயன் பெரிது. அடியார்களுக்கு உணவிடுதலால் வரும்பயன் இதனினும் பன்மடங்கு அதிகம். ஞானிகளுக்கு உணவிடுதல் என்பது இவையனைத்தையும் விட ஒப்பற்ற பெரும் புண்ணியச்செயல். ஒரு துறவிக்கு - ஞானிக்கு ஒருநாள் உணவிட்டால் (துறவிக்கு நியதி ஒருவேளை உணவே) அதனால் கிடைக்கும் புண்ணியம் பயனுக்கு ஈடு உலகில் எதுவும் இல்லை.

**"அகரம் ஆயிரம் அந்தணர்க்கு ஈயில் என்**
**சிகரம் ஆயிரம் செய்து முடிக்கில் என்**
**பகரு ஞானி பகல் ஊண் பலத்துக்கு**
**நிகரில்லை என்பது நிச்சயந்தானே"**

என்பது திருமூலர் திருமந்திரப்பாடல். "அந்தணர்க்குக் கொடுத்தல், ஆலயம் கட்டுதல் ஆகிய இவற்றைவிட ஞானிக்கு உணவளித்தல் மிகச் சிறந்தது" என்பது இதன் பொருள்.

துறவிக்கு உணவிடுவது "பிக்ஷை"யாகும். பிக்ஷையை இட்டு அதை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டி அவரை வந்தனை செய்வதே "பிக்ஷாவந்தனம்" எனப்படும்.

இம்முறை ஸ்ரீமடத்தில் சிறப்பாக நடைபெறுகிறது. அன்பர்களும், சிஷ்யர்களும் தங்களுக்குள் பிக்ஷாவந்தனத்திற்காகக் குழுவை அமைத்துக் கொண்டு அதன் மூலம் ஆண்டில் ஒரு குறிப்பிட்ட நாளில் / நாட்களில் ஸ்ரீமடத்திற்கு / முகாமிற்கு வந்து குருநாதரைத் தரிசித்து அன்றைய பிக்ஷாவந்தனத்திற்குரிய உணவுப் பொருள்கள் அனைத்தையும் வாங்கி வைத்து, பூஜை சமயத்தில் சமர்ப்பித்துக் குருநாதரை வேண்டிக் கொண்டு, ஏற்புக்குப் பின்பு உணவு சமைப்பதற்குத் தந்து விடுகின்றனர். இந்த உணவு சுவாமிக்கு நிவேதனமாகவும் குருநாதருக்கு (துறவிக்கு - ஞானிக்கு பிக்ஷையாகவும் பயன்பட்டு பிறகு அடியார்களுக்கும் உணவாகப் பரிமாறப்படுகிறது.

இப்புண்ணியச் செயலால் அதில் பங்கேற்கும் அனைவருக்கும் திருமூலர் வாக்குப்படி நிகரில்லாத

புண்ணியப்பயன் நிச்சயமாகக் கிடைக்கின்றது.

தனிப்பட்டோர், குழுக்கள், ஊர்ப்பொதுச் சபைகள், டிரஸ்டுகள் முதலிய பல வகைகளாலும் பிக்ஷாவந்தனமாகிய இப்புண்ணியச் செயல் ஸ்ரீ மடத்தில் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**ஸ்ரீ காஞ்சி ஆச்சார்யாள் தாஸர்கள் பிக்ஷாவந்தன டிரஸ்டு**

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாள் அவர்கள் சாதுர்மாஸ்யத்தில் முதல் அமாவாசையன்று (ஆடிமாதம்) பிக்ஷாவந்தனம் செய்யும்படி எனக்குக் கட்டளையிட்டார்கள். அதன்படி ஸ்ரீ காஞ்சி ஆச்சார்யாள் தாஸர்கள் பிக்ஷாவந்தனம் என்ற பெயரில் ஒரு டிரஸ்டு ஏற்படுத்தி மூலதனமாகச் சுமார் ரூ.30,000/- ஸ்ரீ மடத்தில் கட்டி ஒவ்வொரு வருடமும் 12.08.1990 முதல் நமது பிக்ஷாவந்தன் நடைபெற்று வருகிறது.

அமாவாசையன்று யதிகளுக்கு பிக்ஷையிடுவது மகவும் சிறப்பானது. அன்று ஸ்ரீ மடத்தில் ஸ்ரீ திரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ சந்திரமௌளீஸ்வரர் பூஜைக்குச் சங்கல்பம் செய்து ஸ்ரீ பெரியவாளிடம் பிக்ஷையை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டு நாம் வாங்கிவந்த பூஜைக்குரிய பொருட்கள் அன்னதானத்திற்கு வாங்கி வந்த பொருள்கள் அனைத்தையும் சமர்ப்பிப்பது வழக்கமாகும்.

ஆண்டிற்கு ஒருமுறை ஏதாவது ஒருநாளில் நமது ஸ்ரீமடததைச் சேர்ந்தவர்கள் அனைவரும் குடும்ப சகிதம் ஸ்ரீ மடத்திற்கு வந்து குருதரிசனம் கண்டிப்பாகச் செய்து குருவுக்குப் பிக்ஷாவந்தனம், ஸ்ரீ சந்திரமௌளிசுவரர் பூஜை, பாத பூஜைகளைச் செய்து குருவருளைப் பெறவேண்டும் என்பது இந்த டிரஸ்டின் நோக்கமாகும்.

அதனால் அனைவரும் ஆடி அமாவாசையன்று அவரவர்களால் இயன்ற பொருள்களை வாங்கிவந்து பூஜையில் சமர்ப்பித்து ஸ்ரீ பெரியவாளின் அருளாசியைப் பெற வேண்டுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**தொகுப்பு : ஆசிரியர்**



# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

**காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 2 பகுதி - 36**

என்னது ஸ்கூல் படிக்கும் போதே காதலா? என் பிள்ளை / பெண் அதெல்லாம் செய்யாது. அதுக்கு (!) எதுவும் தெரியாது" என்று புலம்பும் பெற்றோர்களை நான் அன்றாடம் காண்கிறேன்.

ஒரு முறை ஒரு 8வது வகுப்பு பெண் என்னிடம் இந்த பிரச்சினைக்காக அழைத்து வரப்பட்டாள். பெற்றோர்கள் பேசிய பிறகு அச்சிறுமியிடம் பேசும் பொழுது "என்ன பெரிசா சொல்லிடப் போறா? முளைச்சு மூணு இலை விடலை, உடனே காதலாம் என்று சொல்லுவார்கள். எனக்கு எல்லாம் தெரியும்? என்றாள்.

இது காதல் அல்ல. இந்த வயதில் வருவது ஈர்ப்பு என்பது சிறுவர் / சிறுமியருக்கு புரியாத அளவில் ஹார்மோன்கள் உடலில் துள்ளி குதிக்கும்.

ஆனால் அது மட்டுமே இதற்கான காரணம் அல்ல. பெற்றோர்களும் ஒரு முக்கிய காரணம்!.

என்ன, என்னோடு சண்டைப் போடத் தயாராகிக் கொண்டிருக்கிறீர்களா? பொறுமையாக படியுங்கள்.

நான் ஒவ்வொரு முறையும் எழுதியது போல உங்களிடமிருந்து வெளிப்படும் கோபம், ஆத்திரம் படபடப்பு ஆகியவை இதற்கு முக்கியமான காரணம்.

பெற்றோர்களுக்குள்ளும், வீட்டிலும் நடக்கும் ஈகோ பிரச்சினைகளின் வெளிப்பாட்டினை குழந்தைகள் உன்னிப்பாகக் கேட்கின்றன என்பதை பெற்றோர்களும், பெரியவர்களும் மறந்து விடுகின்றனர்.

குழந்தைகள் பள்ளியிலிருந்து வந்தவுடன், அவர்களோடு நேரம் செலவிடுவது மிக முக்கியம்.

ஆனால் பல பெற்றோர்கள் அந்நேரத்தைக் கேள்விகளாகக் கேட்டு, கோபமூட்டுகின்றனர். மகன் / மகள் (10) வயது சற்றே வயது கூடியவர்கள் அவர்கள் குழந்தைகளல்ல என்பதை புரிந்து

கொள்ளுங்கள்.

சில சமயங்களில் குழந்தையாகவும், மற்றவர்கள் எதிரில் பெரியவர்கள் போல நடந்து கொள்ள துடிக்கும் “டீன் ஏஜை” பெற்றோர்கள் தானே புரிந்து கொள்ள முடியும்.

ஆனால் அதை விடுத்து அவர்களை மட்டம் தட்டுவது சிடுசிடுப்பது அவர்கள் பேச வந்தால் காது கொடுத்து கேட்காமல் இருப்பது போன்ற குணங்கள் பெற்றோர்களிடம் இருந்தால் மனதளவில் குழந்தைகள் விலகும் வாய்ப்பு அதிகம்.

மனதில் தோன்றும் வெறுமைக்கு மாற்றாக யார் தன் மீது அதிக கவனம் செலுத்துகிறார்களோ அவர்களை “காதலிப்பதாக” உள்ளே புகுந்துள்ள புதுவித ஹார்மோன்கள் கதை சொல்லும்.

நீங்கள் இந்த வயதில் சினிமாவில் பார்த்த ஹீரோ, கிரிக்கெட் பிளேயர் என்று யாரோ ஒருவரிடம் ஒருவித கவர்ச்சி கொண்டிருப்பீர்கள். அதை நுணுக்கமாக கவனித்து ஏதோ ஒரு வேலைகளில் உங்களை ஈடுபட வைத்து உங்கள் கவனத்தை பாட்டியோ, சித்தியோ வேறு விஷயத்தில் செலுத்தும்படி செய்திருப்பார்கள்.

இன்றைய ‘‘டீன் ஏஜர்’’-களின் உற்ற நண்பர்களாக இவையனைத்தும் திகழ்கின்றன என்றால் மிகையாகாது.

இந்த நண்பர்கள் அவர்களுக்குள் திணிக்கும் விஷயங்களுக்கு அளவேயில்லை. அதனால் பிஞ்சில் பழுப்பதில் என்ன அதிசயம் இருக்கிறது.?

இதற்கு தீர்வு தான் என்ன என்று நீங்கள் “படபடப்பாக” கேட்பது தெரிகிறது.

அடுத்த மாதம் வரை பொறுமையாக காத்திருங்கள்.

இப்பொறுமையை பற்றி வள்ளுவர் கூறுகிறார்.

“ஒன்றாமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது”

(அதிகாரம் - 89 (உட்பகை) குறள் - 886)

‘‘ஒன்றே போல் இணைந்து வாழ்ந்து, பணிகளை செய்பவர்களுக்குள் உட்பகை தோன்றிவிட்டால் அழிவு வராமல் இருக்காது”

புரிகிறதா?

தொடரும்....



## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

# தானத்தின் நன்மைகள்



செல்வம் நமக்கு பெரிய சுகத்தை கொடுக்கும் என்றும் அதனால் நமது ஆசைகளை எல்லாம் நிறைவேற்றிக் கொண்டுவிடலாம் என்றும் மக்கள் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

செல்வத்தைச் சேர்ப்பதற்காக ஒருவன் அதர்ம வழியில் செல்வதற்குக்கூட தயங்குவதில்லை. அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய பணத்தைக் கொடுக்கக்கூட அவனுக்கு மனம் வருவதில்லை. இதனால், கள்ளக் கணக்குகளை அவன் தயார் செய்ய வேண்டியுள்ளது. ஒரு வேளை பிடிப்பட்டாலோ, லஞ்சத்தைக் கொடுத்து தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறான். எப்படியாவது பணத்தைக் கோடி கோடியாக சேர்த்துவிட வேண்டும் என்று நினைக்கிறான். ஆனால், அப்படி சம்பாதித்த பணத்தை எங்கே எடுத்து வைப்பது என்பதும் அவனுக்கு ஒரு பிரச்சினையாகி விடுகிறது. ஆகையால், அப்பணத்தை ஒரு பெட்டியில் எடுத்து வைத்தே ஆக வேண்டியுள்ளது. அந்தப் பெட்டியை பூட்டி வைத்திருக்க வேண்டும். மேலும், அப்பெட்டியை மிக பாதுகாப்பான இடத்தில் வைத்துக்கொள்ள முயற்சிகள் பல அவன் எடுக்க வேண்டும்.

சந்தியாவந்தனம் செய்யும்போது அவனுக்கு இந்தப் பெட்டியின் ஞாபகம் மனதில் வருகிறது. பூஜையில் உட்கார்ந்திருக்கும் போதும், அவனுக்கு மீண்டும் பெட்டியின் நினைவே நெஞ்சில் வந்து வாட்டுகிறது. எப்பொழுதுதான் அவனுக்கு இந்தப் பெட்டியின் எண்ணத்திலிருந்து விடுதலை கிடைக்கும்? அவனது உடலைவிட்டு உயிர் பிரியும் போதுதான். இப்படிக் கஷ்டப்பட்டுப் பேராசையுடன சேர்த்துப் பாதுகாத்த செல்வமானது, மற்றொருவர் கைக்கு இவனை அறியாமலேயே சென்றுவிடுகிறது.

இப்படிப்பட்டவன் அந்தச் செல்வத்தைத் தன்னுடனேயே

மறு உலகிற்கும் கொண்டு செல்ல பெரிதும் விரும்புவான். அவன், எப்படியோ பணத்தைச் சேர்த்து விட்டேன். இதுவரையில் அதை என்னுடனேயே வைத்துக் கொண்டிருந்தேன். இறந்த பிறகு கூட நான் அதனை இழக்க விரும்பவில்லை. முடியுமென்றால், என் தலையில் வைத்துக் கொண்டு அதையும் என்னுடனேயே கொண்டு செல்ல ஆசைப்படுகிறேன்" என்றும் நினைத்திருப்பான். இத்தகைய எண்ணம் உள்ளவர்க்கு நீலகண்ட தீக்ஷிதர் நகைச்சுவையுடன் கூடிய பயனுள்ள ஓர் உபதேசத்தை அளித்திருக்கிறார். அவர், "நீ இறந்த பிறகு, உனது செல்வத்தை உன்னுடன் கொண்டு செல்ல நீ விரும்பினால், நீ உயிருடன் இருக்கையிலேயே, நல்ல, தகுதி வாய்ந்த ஒருவனுக்கு அதைத் தானம் செய்துவிடு. இப்படிச் செய்வதால் என்ன நடக்கும்? அந்தச் செல்வம் புண்ணியமாக உருமாறிவிடும். இறந்த பின் உனக்கு தலை என்று ஒன்று இருந்தாலும் இல்லாவிட்டாலும் அந்தச் செல்வமானது புண்ணிய வடிவில் உன்னுடன் வருவது உறுதி" என்று கூறியுள்ளார்.

தகுதி வாய்ந்த ஒருவருக்குக் கொடுக்கும் தானமானது பேராசையாகிய நோய்க்கு உகந்த மாற்று மருந்தாகும் என நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆகையால், தானம் பெறுபவர்கள் தானத்தினால் சந்தோஷத்தை அடைவது மட்டுமின்றி, தானத்தைக் கொடுத்தவர்களும் ஆன்மீக முன்னேற்றத்தை அடைவர். ஒருவன் பணத்தைத் தொலைத்துவிட்டால் மனவருத்தத்தை அடைகிறான். ஆனால், அதே பணத்தை அவனாகவே, பரீட்சைக் கட்டணம் செலுத்த முடியாத ஓர் ஏழைப் பள்ளி மாணவனுக்குக் கொடுத்தால், அவன் அப்பொழுது வருத்தப்படாமல் சந்தோஷப்படுகிறான். அதனால் தானமானது, அதை வாங்கிக் கொள்பவர்களை மட்டுமின்றி கொடுப்பவர்களையும் மகிழ்ச்சியில் திளைக்கச் செய்கிறது.

**குறிப்பு :**
**வேதபாரதி செய்திகள் புத்தகம் பிரதிமாதம் 12ம் தேதிக்குள் தங்களுக்கு தபால் மூலம் கிடைக்கவில்லை என்றால் 9443495950 / 9445102193 என்ற கைபேசி எண்ணிற்கு தங்கள் முகவரி, பின் கோடு மற்றும் தொலைபேசி எண்ணை SMS செய்யவும். உடன் தபாலில் அனுப்பி வைக்கிறோம்.**
**- வேதபாரதி**



20th year of dedicated SELFLESS SERVICE

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"



V.KRISHNAMOORTHY
Managing Trustee



P.AKASHRAM
Executive Trustee




ஏழை புற்றுநோயாளிகளை காக்கும் மாபெரும் பணியை **இருபதாவது ஆண்டாக வெற்றிகரமாக தொடர்ந்து கொண்டு இருக்கும் ஸ்ரீ மாதா டிரஸ்ட்**, தனது சேவை பயணத்தின் ஒவ்வொரு அடியிலும் உற்ற துணையாய் இன்றுவரை இருந்து வரும் மனிதநேயமிக்க நன்கொடையாளர் களான உங்களுக்கு ஏழை புற்றுநோயாளிகளின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை சமர்ப்பிக்கின்றது.

சிலர் தேவைக்கு அதிகமாக உள்ளதை தர்மம் செய்கிறார்கள்; சிலர் தேவைகளை குறைத்துக் கொண்டு தர்மம் செய்கிறார்கள். எது எப்படியோ, ஏழை புற்றுநோயாளிகளுக்கு உதவ வேண்டும் என்ற சிந்தனையை எண்ணற் றோருக்கு ஏற்படுத்தியிருப்பதை எண்ணி ஸ்ரீ மாதா டிரஸ்ட் பெருமிதம் கொள்கிறது. அத்தகைய பெருமிதத்துடன் ஸ்ரீ மாதா டிரஸ்ட் மற்றும் நன்கொடை யாளர்கள் இணைவதால் ஏழை புற்று நோயாளிகள் சிகிச்சை காலம் முடியும் வரை "**நம்ம தர்மசாலா**"வில் உணவும், உறைவிடமும் **முற்றிலும் இலவசமாக** அனுபவிக்கிறார்கள். அதன் பயனாக ஏழை புற்றுநோயாளி கள் கேன்சர் ஆஸ்பத்திரியில் முறை யான தொடர் சிகிச்சை பெறுவதால், நோயாளிகள் நோய் முற்றி இறுதி நிலைக்குச் செல்வது தடுக்கப்படுகிறது.



**நம்ம தர்மசாலா**வில் மகிழ்ச்சியுடன் மதிய உணவு உண்ணும் ஏழை புற்றுநோயாளிகள்.

**ஒரு நன்கொடையாளரின் உணர்வுபூர்வமான மடல்...**

ஆ.மகாலிங்கம், துணை ஆட்சியர் (ஓய்வு)
விருது நகர் மாவட்டம்–31.5.2019

ஐயா, தங்களது தபால் ஒன்று கிடைக்கப் பெற்றது. தாங்கள் பத்தொன்பது ஆண்டுகளாக சீரும் சிறப்புடன் நிர்வகித்து வந்த "ராஜஸ்தான் தர்மசாலா" வை கேன்சர் ஆஸ்பத்திரி நிர்வாகம் உங்களிடமிருந்து எடுத்துக் கொண்டது எனக்கு வேதனையாக இருந்தது. என்ன சொல்வது?! தங்களது சேவையை மனம் தளராமல் "நம்ம தர்மசாலா" மூலம் தொடர்வது மகிழ்ச்சியாக உள்ளது. இக்கட்டான சூழ்நிலையிலும் தாங்கள் மனிதநேய சேவையை விட்டு விடாமல் மனம் தளராமல் தொடர்ந்து நடத்திட உறுதி பூண்டுள்ளது பற்றி சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை. நல்லவர்களையும், நல்லவர்கள் சேவைகளையும் இறைவன் கைவிடுவதில்லை. "நம்ம தர்மசாலா" மூலம் உங்களது பணி முன்னைவிட சிறப்பாக நடக்கும். வாழ்த்துகிறேன்.

இத்துடன் என்னால் இயன்ற நன்கொடைத் தொகை ரூ.1000/–ஐ பாலவட்டம் IOBயில் உங்களது வங்கிக் கணக்கில் செலுத்தி உள்ளேன். ரசீதினை எனது முகவரிக்கு அனுப்ப அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.


தங்கள் அன்புள்ள [signature]



தாய்மையே வெல்லும்..!

புற்றுநோயால் வாடும் தன் மகனுக்கு நம்ம தர்மசாலாவில் வாஞ்சையுடன் உணவு ஊட்டும் தாய். ஸ்ரீ மாதா டிரஸ்ட் உள்ளவரை, ஏழை தாய்மார்களின் அன்பு வென்றிடுமே தவிர, புற்றுநோய் அல்ல..!

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு நம்ம தர்மசாலாவில் தஞ்சமடைந்திருக்கும் தன் கணவன் பசியாறிட குழாய் வழியே உணவு உட்கொள்ள உதவி செய்திடும் பாசமுள்ள மனைவி..!



ஆறுதல் தரும் அன்பு..!



**மோக்ஷம் என்பது செத்துப்போன பிறகு வேறு எந்த லோகத்திற்கோ போய் அனுபவிப்பது அல்ல.**
கை கண்ட பலனாக இந்த உலகில் இருக்கும்போதே நமக்குக் கிடைக்க வேண்டும். நல்லது செய்தால் நல்லது விளையும். இப்போதெல்லாம் கஷ்டம், சுகம் என்று அழுது கொண்டு இருந்துவிட்டு செத்துப் போன பின் மோக்ஷம் கிடைக்கிறது என்பதில் பிரயோஜனம் இல்லை.
**பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும்.**
**ஜகத்குரு காஞ்சி ஸ்ரீ மஹா பெரியவர்**



Early detection ➡ Timely treatment ➡ Cures CANCER

**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்...**

ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
ரூ.25,000/- நிதியளித்து ஒரு நாள் "நம்ம தர்மசாலா" வின் செலவினை ஏற்கலாம்
ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம் அல்லது
ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution to SRI MATHA TRUST by
CHEQUE / NEFT / CASH / M.O.
Account Name: SRI MATHA TRUST | Bank Name: INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20.
Current A/c No.: 163502000001090 | IFSC Code: IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act.
After doing this benevolent act kindly SMS your postal mailing address or kindly e-mail the donation details to enable us send our receipt.

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, [Opp. to Thirukkural Unavagam] Adyar, Chennai - 600 020.
Tel: (044) 2442 0727 / (044) 4266 1687 Mobile: 9444001065 / 9381020727 9003247857 Email : vkrishnamoorthy.smt@gmail.com

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar, Adjacent to IIT Compound, Off:Pallipattu Main Road, Chennai-113. Tel: 044 - 4509 8647

Regd. Office: 'NATHA KAMALAM' 1-A, Periyazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059.







ஓம் நமோ பகவதே வாஸுதேவாயா,
ஓம் நமோ நாராயணாயா.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் — பகுதி - 4




## ஸ்ரீமத் பகவத்கீதை குறித்து ஆன்றோர்களின் வாக்கு



*பகவத்கீதை "ஸமஸ்த்த வேதார்த்த ஸார ஸங்க்ரஹபூதம்" (நல்ல விஷயங்கள் எதுவுமே ஒரு தனி மதத்தை மட்டும் சாராது. ஆகையால் பகவான் உபதேசித்த பகவத் கீதை உலகிலுள்ள சர்வ மனுஷ்ய ஜாதிகளுக்கும் பொதுவான ஒரு மறை அல்லது வேத சாரம்.*

**- ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாள்.**



*பகவத் கீதா உண்மைகள்... காலத்துக்கும் நிற்கும்!*

**- மஹா பெரியவா**



The Bhagavad-Gita was spoken by Lord Krishna to reveal the science of devotion to God which is the essence of all spiritual knowledge. The Supreme Lord Krishna's primary purpose for descending and incarnating is to relieve the world of any demoniac and negative, undesirable influences that are opposed to spiritual development, yet simultaneously it is His incomparable intention to be perpetually within reach of all humanity.

**- Sri Ramanujar**



The Mahabharata has all the essential ingredients necessary to evolve and protect humanity and that within it the Bhagavad-Gita is the epitome of the Mahabharata just as ghee is the essence of milk and pollen is the essence of flowers.

**Sri.Madhuvacharya**




பகவான் ராமகிருஷ்ணர் கூறுகிறார்.... கீதை கங்கையைக் காட்டிலும் சிறந்தது. காரணம் கங்கை பகவானுடைய திருவடித் தாமரையிலிருந்து பெருகியது. கங்கையில் முழ்கி எழுகிறவனுக்கு மட்டுமே கங்கை முக்தியை அளிக்கிறது. ஆனால் பகவத்கீதையோ பகவானின் திருமுகத் தாமரையிலிருந்து வெளிவந்ததோடு ஒவ்வொரு வீடாகச் சென்று எல்லோருக்கும் முக்தி மார்க்கத்தை போதிக்கிறது.

**- பகவான் ராமகிருஷ்ணர்**




கீதை எப்போது சொல்லப்பட்டது என்பது முக்கியமில்லை அதில் என்ன சொல்லப் பட்டிருக்கிறது என்பதுதான் முக்கியம்.

**- சுவாமி விவேகானந்தர்**




‘‘எனக்கு குழப்பம் வந்த போதெல்லாம் ஆறுதல் அளித்தது கீதையே’ **- மகாத்மாகாந்தி**




‘ஒரு குழந்தைக்கு தாய்பால் என்ன நன்மையைச் செய்திருக்குமோ அதைவிட அதிக நன்மை செய்தது பகவத்கீதை.

**- ஆசார்யா விநோபாவே**



"The Bhagavad-Gita deals essentially with the spiritual foundation of human existence. It is a call of action to meet the obligations and duties of life; yet keeping in view the spiritual nature and grander purpose of the universe.

**- Jawaharlal Nehru**



The Bhagavad-Gita is a true scripture of the human race a living creation rather than a book, with a new message for every age and a new meaning for every civilization.

**- Sri Aurobindo**



“ஒரு தீப்பெட்டியிலிருந்து எந்த குச்சியிலிருந்து வேண்டுமானாலும் தீயைக் கொண்டுவரலாம். இந்த பகவத் கீதை என்பது 700 குச்சிகளைக் கொண்ட ஒரு தீப்பெட்டி. இதில் எந்த குச்சியைக் கொண்டு கொளுத்தினாலும் (எந்த ஸ்லோகத்தைச் சொன்னாலும்) ஞான அக்னி கொழுந்துவிட்டு எறியும்.


**- சத்திய சாய் பாபா**





உங்களுக்கு அமைதி வேண்டுமானால் தினமும் ஓர் அத்தியாயம் கீதை படியுங்கள். பாராயணம் மட்டும் செய்துபலனில்லை. கீதையின் பொருளை நன்கு உணர்ந்து படிக்க வேண்டும்.

**- சுவாமி பிரம்மானந்தர்**



The Bhagavad-Gita is not seperate from the Vaishnava philosophy and the Srimad Bhagavatam fully reveals the true import of this doctrine which is transmigation of the soul. If we continue and patiently take and time to complete the Bhagavad-Gita and try to ascertain the truth of its closing chapter we can see that the ultimate conclusion is to relinquish all the conceptualized ideas of religion which we possess and fully surrender directly unto the Supreme Lord.


**- Bhaktisiddhanta Saraswati**



பிரிட்டிஷர் நம்முடைய இந்தியாவை ஆண்டபோது “சார்லஸ் வில்கின்ஸ்” என்பவரால் 1785-ம் ஆண்டு முதன் முதலில் “பகவத் கீதை” ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. அந்த மொழிப் பெயர்ப்புக்கு அப்போது இந்தியாவின் பிரிட்டிஷி கவர்னர் ஜெனரலாக இருந்த “வாரன் ஹேஸ்டிங்” என்பவர் கீழ்க்கண்டவாறு முன்னுரை ஏழுதியிருக்கிறார்.

இங்கிலாந்து ஒரு காலத்தில் இந்திய தேசத்தை இழக்கநேரிடலாம். ஆனால் இந்தியாவில் உதித்த இந்த பகவத்கீதையின் கோட்பாடுகளை இங்கிலாந்து அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருமானால் இங்கிலாந்து என்றைக்கும் மேன்மையுற்று விளங்கும்.

(இவர் வாழ்க்கைத் தத்துவத்தின் பெருமைகளை அறிந்த ஒரு பேரறிஞர்) **- வாரன் ஹேஸ்டிங்**



அமெரிக்காவில் மிகச் சிறந்த தத்துவமேதையான ரால்ப் வால்டோ எமர்ஸன் (1803 - 1882) என்பவர் பகவத் கீதையைப்பற்றி கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்.

‘‘என் தினத்தை உன்னதமாக்கியது பகவத்கீதை நூல்களில் முதல் நூல் அது ஒரு மாபெரும் சாம்ராஜ்ஜியத்தின் மகோன்னதம் நம்மிடம் உரையாடுவது போன்றதோர் மகத்துவம் அது அதில் அறியாதது என எதுவுமே இல்லை. ஆனால் மகா விசாலமானதும் அமைதி ததும்புவதும் சீரானதுமானதோர் ஆதி பேரறிவு மற்றோர்

யுகத்திலிருந்து நான் இன்று எதிர் நோக்கும் அதே கேள்விகளை உள்ளார்ந்து அறிந்து பதிலளித்துள்ளதாக அது அமைகிறது.


**- ரால்ப் வால்டோ எமர்ஸன்**



மற்றொரு முக்கிய அமெரிக்க சிந்தனையாளரான - ஹென்றி டேவிட் - பகவத்கீதையை ஆழ்ந்து படித்து கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்.


ஒவ்வொரு காலையிலும் என் சித்தம் பகவத் கீதையின் மகோன்னத பிரபஞ்ச தத்துவத்தில் மூழ்கி எழுகிறது. பகவத் கீதை ஓர் ஆதி யுகத்தில் தெய்வங்களின் காலத்தில் எழுதப்பட்டது. ஆனால் அதனுடன் ஒப்பிடுகையில் நம் நவீன பிரச்சனைகளும் இலக்கியமும் அறப்பமாக தெரிகின்றன.

**- ஹென்றி டேவிட்**




When I read the Bhagavad-Gita and reflect about how God created this universe everything else seems so superfluous.

**- Albert Einstein**



The Bhagavad-Gita has a profound influence on the spirit of mankind by its devotion to God which is manifested by actions.

**- Dr. Albert Schweitzer**



The idea that man is like unto an inverted tree seems to have been current in by gone ages. The link with Vedic conceptions is provided by Plato in his Timaeus in which it states..." behold we are not an earthly but a heavenly plant." This correlation can be discerned by what Krishna expresses in chapter 15 of Bhagavad-Gita.

**- Carl Jung**



The marvel of the Bhagavad-Gita is its truly beautiful revelation of life's wisdom which enables philosophy to blossom into religion.

**- Herman Hesse**

நியூஜெர்ஸியில் உள்ள ஸெட்டான் ஹால் பல்கலைக்கழகம் என்னும் கத்தோலிக்க மதப் பல்கலைக்கழகம் பகவத் கிதையை தன்னுடைய மையப் பாடத்தில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு கட்டாயம் படிக்க வேண்டிய பாடங்களில் ஒன்றாக அறிவித்துள்ளது.

**இன்னமும் ஆயிரக்கணக்கானவர்கள் கீதையின் பெருமையைக் கூறியிருக்கிறார்கள்.**



# சுபாஷிதம் - 9

''சுபாஷிதம்'' என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள். சம்ஸ்கிருத பாடம் கற்றுக்கொள்ளும் போது இத்தகைய சிறு சிறு ஸ்லோகங்களை கற்றுத்தருவார்கள். இந்த வகையான ஸ்லோகங்கள் சொல்வதற்கு கம்பீரமானதாகவும் அந்த மொழியின் மீது ஒரு பிடிப்பையும் மரியாதையையும் ஏற்படுத்தும் என்பது மறைபொருளாக இருந்தபோதிலும், இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவரும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக, எடுத்துக்காட்டாக விளங்குவான்.

**1. அர்த்தா துராணாம் ந குது ந பந்து**
**காமா துராணாம் ந பயம் ந வஜ்ஜா**
**வித்யா துராணாணம் ந சுகம் ந நித்ரா**
**க்ஷுதா துராணம் ந ருசி: ந பக்குவம்**

பொருள் : நல்ல பசி உள்ளவன் பக்குவமான சாப்பாடோ அல்லது ருசித்தும் சாப்பிட ஆசை படமாட்டான். கிடைத்த சாப்பாட்டை சந்தோஷப்பட்டு சாப்பிடுவான். படிக்கும் மாணவ பருவத்தில் அவனுக்கு சுகம் (அதாவது படுக்கை - தலையணை போன்றவற்றை உபயோகித்து) தூங்குவதும் கிடையாது. கூடாதாம். பணம் சம்பாதிக்க வேணும் என்ற ஆசை உடையவன் தன் குருவிற்கோ, தனது உறவினர்களுக்கோ தீங்கு செய்ய பயப்பட மாட்டான். பணம் சம்பாதிப்பதே அவனது குறி, அதே மாதிரியே காம சுகத்தில் விருப்பம் உள்ளவன் பயம், மரியாதை, உற்றார் உறவினர் என்று பார்த்து நடந்து கொள்ள மாட்டான்.

இதே பொருள் கொண்ட தமிழ் பாடல் :

**பசி ருசி அறியாது**
**நித்திரை சுகம் அறியாது**
**குடி நிலை அறியாது**
**காமம் - குலம் அறியாது.**

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

**பிரம்மஶ்ரீ முனிஸ்வர ஸாஸ்திரிகள்**
ஸ்தாபகர் ஸ்ரீ வித்யா ஸ்தானம் ட்ரஸ்ட், சென்னை.

# தர்மத்தின் குரல்
## பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
*அத்தியாயம் 2 : மறுபிறப்பு*
### 2.14. இன்னும் சில கேள்விகள் :

சென்றமாத தொடர்ச்சி...

*7. ஒருவனுடைய கர்மாவை மாற்ற முடியுமா அல்லது அதன் பலனை ஒருவர் அனுபவித்துத்தான் தீர வேண்டுமா?*

கர்மாவை நிச்சயமாக இன்னொரு கர்மாவினால் மாற்ற முடியும்.அதற்கு மாற்று மருந்து உள்ளது. ஒரு நல்ல கர்மா, ஒரு கெட்ட கர்மாவால் ரத்தாகும். அதேபோல், ஒரு கெட்ட கர்மா. ஒரு நல்ல கர்மாவால் ரத்தாகும். ப்ராரப்தம் ஒரு இன்பகரமான விளைவைத் தருகிற போது, அது புண்ணியத்தின் பலன், அது துக்கம் தருகிறபோது அது பாபத்தின் பலன், துக்கம் ஏற்பட்ட உடனே, மக்கள் அதன் காரணமாக பாபத்தைத் தொலைக்க விரும்புவார்கள். அதற்குத் தேவையான கர்மா, பிராயஸ்சித்தம் எனப்படும். அப்பிராயஸ்சித்தம் மூன்று வகைப்படும். அவை ஜபம், தானம், உபவாசம் ஆகும். இம்மூன்று வகைகளின் தரம், அளவு ஆகியவற்றில் பிராஹஸ்சித்தம் மாறுபடும். ஒருவர் அதிக அளவிலோ அல்லது குறைந்த அளவிலோ உபவாசம் இருக்க வேண்டியிருக்கும். அல்லது இந்த ஜபத்தையோ வேறு ஜபத்தையோ செய்ய வேண்டியிருக்கும். உபவாசமும் தானமும் எல்லோராலும் செய்ய முடியாது. ஒரு சர்க்கரை நோயாளியும் வயிற்றுப்புண் உள்ளவரும் உபவாசம் இருக்க முடியாது. ஓர் ஏழை மனிதன் தானம் செய்ய முடியாது. ஆனால் ஜபம் செய்யும் விஷயத்தில் இவ்வளவு தடைகள் இருக்க முடியாது. எல்லோரும் ஜபம் செய்வதற்கு ஏதுவாக, நமது ரிஷிகள், ஜபவிதிகளைத் தளர்த்தியுள்ளார்கள். ஒருவரால் உட்கார்ந்துகொண்டு ஜபம் செய்ய முடியவில்லையென்றால் அவர் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு ஜபிக்கலாம். அதுவும் இயலாவிட்டால் படுத்துக் கொண்டும் செய்யலாம். எனவே, ஒவ்வொருவரும் பாபத்தைத் தொலைப்பதற்கோ அல்லது புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொள்வதற்கோ, ஜபம் செய்ய வேண்டும்.



*8. ப்ராயஸ்சித்தமும் நல்ல கர்மாக்களும் செய்த பிறகும், பல நேரங்களில் வெற்றி கிடைப்பதில்லை. ப்ராரப்தம் தொலைக்க முடியாதது, அனுபவித்துத்தான் தீர வேண்டியது என்று சொல்லப்படுவதையும் கேள்விப்படுகிறோம். இதை விளக்க முடியுா?*

ப்ராரப்தம் என்பது, நாம் முந்தையப் பிறவிகளில் செய்த நம்முடைய கர்மாக்கள்தான். ஆனால், அது எவ்வளவு என்பதும் அது என்ன என்பதும் நமக்குத் திட்டவட்டமாகத் தெரியாது. இருப்பினும், அதை அனுபவிக்க வேண்டியுள்ளது. ஆனால், ப்ராயஸ்சித்தம் மூலமாக, அதைத் தீர்த்துக் கொள்ள முடியும். உதாரணமாக தன் பிராரப்தத்தால் எட்டு வயதில் இறக்க வேண்டிய மார்க்கண்டேயன், தன் தவத்தினால் அதை வெற்றி கொண்டான். நெடுங்காலம் வாழ்ந்தான். ப்ராரப்தம் காரணமாக விதவையாயிருக்க வேண்டிய சாவித்திரி, தன் தவத்தால் அதை வென்றாள். ஆனால், ப்ராரப்தத்தை வெற்றி கொள்ள வேண்டிய அளவுக்குத் தவம் செய்வது, பல நேரங்களில், சாதாரண மக்களால் இயலாது. ப்ராரப்தத்தின் அளவு நமக்குத் தெரியாததால், நாம் செய்யும் தவத்தால் வெற்றி கிட்டிய பின்தான், அதன் நீக்கம் நமக்குத் தெரிய வரும். செய்யப்படும் தவம், அதன் வலிமையிலோ அளவிலோ அல்லது இரண்டிலுமோ குறைவானதாக இருந்து விடலாம். ப்ராயஸ்சித்தத்தின் முழுப்பலன் வெளிப்பட, மூன்று விஷயங்கள் அவசியம் என பகவான் வியாசர் சொலகிறார். அவை, மன ஒரு முனைப்பு, கர்மா செய்வதில் சரியான முறை, தானம் ஆகியவை. நாம் வெற்றி பெறாத சில சமயங்களில் ப்ராரப்தத்தைக் குறைக்க முடியாது என்ற தவறான முடிவுக்கு வரக்கூடாது. தவத்தின் தரத்தையும் அளவையும் நாம் உயர்த்தினால் மட்டும் போதும்.

தொடரும்......

# ஸந்த்யா வந்தன பயிலரங்கம்

**வாசகர் கடிதம் :**

வேதபாரதி நடத்திய சந்த்யாவந்தனம் முகாம் 2019 உண்மையில் மிகவும் இனிமையான மற்றும் தகவல் தரும் அனுபவமாகும். மூன்றுநாட்களில் நாங்கள் சந்த்யா வந்தன நித்யகர்மாவின் பல்வேறு பகுதிகளைக் கற்றுக் கொண்டு அவற்றை முழுமையாகப் பயிற்சி செய்தோம்.

நாங்கள் முகாமுக்கு வந்த நாளில் சந்த்யாவந்தனம் பயிற்சி செய்ததோடு மட்டுமல்லாமல், ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகள் அதிஷ்டானம் பார்வையிட்டோம். மேலும் அவரைப் பற்றியும், ராம நாமத்தை பிரபலப்படுத்த அவர் எடுத்த முயற்சிகள் பற்றியும் நிறை கற்றுக் கொண்டோம்.

இரண்டாவது நாள், சந்த்யாவந்தனம் அன்றாட வழக்கத்திற்கு மேலதிகமாக நாங்கள் ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவாளின் தபோவனம் பார்வையிட்டோம். அங்கு சாயம் சந்த்யாவை நிகழ்த்துவதற்கான வாய்ப்பு கிடைத்தது.

இந்து மதம் மற்றும் இந்திய சுதந்திரப் போராட்டம் பற்றிய சில பொழுது போக்கு மற்றும் தகவலறிந்த பேச்சுக்களைக் கேட்கும் வாய்ப்பையும் நாங்கள் பெற்றோம். இருப்பினும் சில அரசியலைப் பற்றிய குறிப்புகள் எங்கள் வயதிற்குப் புரியவில்லை.

மூன்றாவது மற்றும் இறுதி நாள் வேடிக்கையாக இருந்தது. முகாமை சாத்தியமாக்குவதற்கு ஒன்றாக வந்த வெவ்வேறு நபர்கள் அனைவரையும் பார்த்து வியப்பாக இருந்தது.

மொத்தத்தில் இந்த முகாம் குதூகலமாக மற்றும் தகவலறிந்ததாகவும் இருந்தது. முகாமில் எனது நேரம் இன்பம்.

**ஆதிஷ் சிவசுப்ரமணியன்,**
*உள்ளகரம், சென்னை - 91.*



# போஜன நியமங்கள்:

- தரையில் உட்கார்ந்த படி, மனசாந்தியுடன் சிற்றுண்டி சாப்பிடவும்.
- சிற்றுண்டி உணவு அருந்துமுன் கைகளையும், கால்களையும், வாயையும் நீரினால் சுத்தம் செய்யவும்.
- சாப்பிடும் பொழுது வியர்த்தால், வியர்வயைத் துணியால் துடைத்துக் கொள்ளவும்.
- சாப்பிடுவதற்கு உபயோகித்த தட்டு, டம்பளரைச் சாப்பிட்டவுடன் கழுவவும்.
- சாப்பிட்ட இடத்தை உடனேயே நீரினால் துடைத்து சுத்தம் செய்யவும்.
- சாப்பிட்டவுடன் பாத்திரங்களை நன்றாகச் சுத்தம் செய்து குறிப்பிட்ட இடத்தில் வைக்கவும்.
- தண்ணீர் குடிக்கும் பொழுது எச்சில் பண்ணாமல் நீரை உயர்த்திக் குடிக்கவும்.
- சாப்பிடும்போது பேசக்கூடாது. சிலர் அரட்டை அடித்தபடி சாப்பிடுவார்கள். இது தவறு. உணவு வேளை என்பது கருத்துப் பரிமாற்றத்திற்கான நேரம் அல்ல. கவனம் முழுவதும் உண்ணும் உணவிலும் அதன் சுவையிலும் மட்டுமே இருக்க வேண்டும். நன்கு மென்று சாப்பிடவும். Eat the Liquid, Drink the Solid என்பது ஆங்கிலக் கூற்று.
- சில விசேஷ நிகழ்வுகளின் போது நமது உற்றார் உறவினருடன் உணவு உண்கையில் மௌனம் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் இல்லை.
- வாய் கொள்ளுமளவிற்கு கையில் உணவு எடுத்து உண்ண வேண்டும். வாய்க்குள் போட்டதை கடித்து மீந்ததை மற்ற உணவுடன் கலப்பது அல்லது கீழே துப்புவது கூடாது.
- பந்தியாக பலர் அமர்ந்து உண்ணும்போது நடுவில் ஒருவர் எழக்கூடாது. அப்படி எழும்படியான நிர்ப்பந்தம் இருந்தால் அடுத்து அமர்ந்திருப்பவரிடம் அனுமதி பெற்று எழவேண்டும்.
- உணவை மீதம் வைக்கக் கூடாது; அது அன்ன நிந்தனைக்கு ஸமானம்.

- ❀ சாப்பிட்டு முடித்தபின் நீரால் வாய் கொப்புளித்து நாக்கு பற்கள் ஆகியவற்றில் ஏதும் ஒட்டியிராத அளவுக்கு சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். பற்களுக்கு இடையே உணவு பதார்த்தங்கள் தங்காத அளவுக்கு கொப்புளித்து உமிழ வேண்டும்.
- ❀ கற கற நற நறவென சத்தம் கேட்கும்படி கடித்து உண்பது (குறிப்பாக தட்டை, முறுக்கு போன்றவற்றை) சாப்பிடும்போது மூக்கைச் சிந்துவது காரித் துப்புவது; பாயஸத்தை சத்தமாக உறிஞ்சிக் குடிப்பது ஆகியன கூடாது.
- ❀ பிறரது எச்சிலை உண்ணவே கூடாது.
- ❀ உணவின் அளவு அவரவரது ஜீரணிக்கும் சக்திக்கு ஏற்ற அளவுக்கு மட்டுமே இருக்க வேண்டும். பருவ நிலைக்கு ஏற்ப கூட்டியோ குறைத்தோ உண்ணலாம்.
- ❀ போஜனத்தின் ஆரம்பத்தில் திரவ உணவும் (சூப்பு, பாயஸம், பச்சடி, போன்றவை) நடுவில் திட உணவும் மீண்டும் போஜன முடிவில் திரவ உணவு (மோர், பாயஸம், பழச்சாறு) அமைவது நல்லது.
- ❀ பலருக்கு ஒரே நேரத்தில் உணவளித்தல் பந்தியில் ஓரவஞ்சனை கூடாது.
- ❀ நமது உண்கலனும் பக்கத்தில் அமர்ந்திருப்பவர் உண்கலனும் (இலை/தட்டு) ஒன்றோடு ஒன்று இடித்துக் கொண்டு இருக்க கூடாது.
- ❀ இப்போதெல்லாம் பஃவே முறையில் உணவு பரிமாரப்படுகிறது. உணவுத் தட்டை வாங்கி நின்று சாப்பிடாமல் அமர்ந்து சாப்பிடுவது நல்லது. இதற்கு விருந்து ஏற்பாடு செய்கிறவர்கள் அமர்ந்து உண்ண வசதி செய்ய வேண்டும்.
- ❀ உணவு உண்ட பின் மெதுவாக நூறு அடி நடந்து பின் வஜ்ராஸனத்தில் நிமிர்ந்து உட்கார்வது நல்லது. (Atleast for 10 minutes)

**ஆர்.பி.வி.எஸ்.மணியன்**



## புதுச்சேரி வேதபாரதியின் சாதனை முயற்சி

புதுச்சேரி வேதபாரதி குழுவினரின் மிகவும் பாராட்டத்தக்க முயற்சியாக 270 உறுப்பினர்கள் கொண்ட வேதபாரதி குழுவினரை கடந்த வாரம் காஞ்சியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ அத்திவரத பெருமாளை தரிசனம் செய்ய புதுவை முதலமைச்சர் சிபாரிசு கடிதத்துடன் சென்று தரிசனம் செய்துள்ளார்கள். இந்த முயற்சி புதுவை நிர்வாகிகளுக்கு பெரிய உத்வேகத்தையும், அனுபவங்களையும் கொடுத்துள்ளது. ஓர் அமைப்பின் வெற்றிக்கு முதல் படியே விடா முயற்சியும் தன்னம்பிக்கையும். புதுவை வேதபாரதி செய்துள்ள இந்த பயணம் மிகவும் பாராட்டத்தக்கது. தங்கும் இடம், உணவு ஏற்பாடுகள் எல்லாவற்றிலும் தனி கவனம் செலுத்தியது மிகவும் போற்றுதலுக்குரியது. பெரிய கடினமான பணிகளில் சிறய அசௌகரியங்கள், குறைகள் இயற்கையானது. அதைவிட சிறப்பு சென்றுவந்த நம் உறுப்பினர்கள் கொடுத்த வாக்குமூலம் மிக அருமை. அந்த பதிவையும் இங்கு பிரசுரம் செய்துள்ளோம்.

**என்றும் அன்புள்ள ஆசிரியர்.**

**உறுப்பினரின் அனுபவம் :** அனைவருக்கும் வணக்கம், நம் வேதபாரதி நோக்கமே நம் பிராமண சமூகத்தினரை ஒருங்கிணைத்து, வேதத்தை கற்பித்து அது சொல்லும் வழியில் நம் சமூக வாழ்க்கை அமைய பாடுபடுவதே. லாப நோக்கம் பார்க்காமல் நம் வேதபாரதி பணிகளை செய்து வருகிறது. வேதபாரதி நிர்வாகிகள் அனைவரும் அவரவர் சொந்த வேலைகளில் மிகவும் பிசியானவர்கள். அவரவர் மனைவிகளும் தங்களின் இல்ல வேலைகளையும் பார்த்துக் கொண்டு தம் கணவரோடு வேதபாரதிக்கும் தங்கள் பங்களிப்பை அளித்து வருகின்றனர். ஒரு அமைப்பினை உருவாக்கி அதனை வெற்றிகரமாக எந்த குறையும் இல்லாமல் நடத்துவது சாதாரண செயல் அல்ல. காஞ்சிபுர அத்திவரதர் தரிசனத்திற்கு நம் பாண்டிச்சேரியிலுள்ள நம் வேதபாரதி சிறப்பாக திட்டமிட்டு ஏற்பாடுகளை செய்தது. 270 பேருக்கும் மேற்பட்டவர்கள்

தரிசனம் செய்தனர். அவர்களுக்கு சிறப்பான பஸ் வசதி, டிபன் சாப்பாடு ஏற்பாடுகளை செய்து தந்தார்கள். அனைவருக்கும் சிறப்பு தரிசனத்திற்காக நிர்வாகிகள் அரும்பாடுபட்டனர். நிர்வாகிகள் அனைவரின் கடும் உழைப்பால்தான் அத்திவரதரை தரிசனம் செய்ய முடிந்தது. தரிசனத்தன்று எதிர்பாராத கூட்டம் வந்ததால் நம் ஏற்பாடுகள் வீணாகி விட்டது. அந்த வேலையிலும் சிறப்பான உணவு வழங்கியதோடு மட்டுமல்லாமல் அனைவருக்கும் தரிசனத்தை செய்து வைத்தனர். அன்று கலைவாணர் நகரைச் சேர்ந்த பாட்டி ஒருவர் கும்பலில் வழி தவறி சென்று விட்டார். அவரை நிர்வாகிகள் பலரும் பலமணி நேரம் தேடினர். மிகவும் டென்ஷனிலும் நம் புதுவை வேதபாரதி தலைவர் திரு.ஆசிர்வாத ரமேஷ் அவர்கள் வந்திருந்த மற்ற அனைவரையும் புதுச்சேரிக்கு அனுப்பி வைத்துவிட்டு அவர் பாட்டியை கண்டுபிடித்து அழைத்து வருகிறேன் என அங்கேயே தங்கிவிட்டார். பாட்டி வீட்டிற்கு தகவல் தந்து அவர்களும் பாட்டியை தேடி வந்தனர். பகல் 3 மணிக்கு காணாமல் போன பாட்டி மறுநாள் விடியற்காலை 3.30 மணிக்கே கண்டுபிடிக்கப்பட்டார். அது வரை அங்கேயே இருந்து பாட்டியின் குடும்பத்தினர் வசம் அவரை ஒப்படைக்கும் வரை திரு.ரமேஷ் அனுபவித்த மனகஷ்டங்கள் சொல்லி அடங்கா அவரின் தன் நலன் கருதா அர்ப்பணிப்பு சேவையால்தான் அன்று புதுச்சேரியிலிருந்து சென்ற அனைவரும் நலமுடன் திரும்பி வந்தனர். அதற்காக நாம் அனைவரும் அவரை பாராட்ட கடமை பட்டவர்கள். திரு.ரமேஷ் அவர்கள் ஆசிர்வாத் அஷோசியேட்ஸ் எனும் நிறுவனத்தை நடத்தி வருபவர். அவரை சந்திக்க நாம் அவரிடம் முன்கூட்டியே அப்பாய்ன்மென்ட் வாங்கியே பார்க்க முடியும். அந்த அளவுக்கு மிகவும் வேலை பளு கொண்டவர். வேதபாரதிக்கு அவர் தரும் ஆதரவு, உழைப்பு சொல்லில் அடங்கா. அவரும் மற்ற நிர்வாகிகளும் இந்த தரிசனத்திற்காக செய்த வேலைகள் அளப்பரியா. அதற்காக நாம் அனைவரும் திரு.ரமேஷ் தலைமையிலான நிர்வாகிகளை எவ்வளவு பாராட்டினாலும் தகும். வாழ்க வேதபாரதி.

**-ஆசிரியர்**





**'வேதபாரதி'**

மற்றும்

**'ஸ்ரீ சங்கரா எஜுகேஷனல் டிரஸ்ட்'**

ஆகியோர் இணைந்து வழங்கும்

# 'ஔவை விழா 2019'

இன்றைய மாணவ, மாணவியர் அறிவுத் திறன் மிக்கவர்களாக விளங்குகிறார்கள். அவர்கள் கல்வியோடு, திருக்குறள், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்ற சிறந்த நல்ல நூல்களை வாசிக்கும் பழக்கத்தைத் தங்களுக்குள் வளர்த்துக்கொண்டால் சிறந்த மனிதர்களாக உருவாகலாம். பள்ளிக் குழந்தைகள் தமிழ் நூல்களை ஆழமாக உணர்ந்து படித்து அதன் வழி நடக்க வேண்டும் என்பதற்காக 'வேதபாரதி' பாரத பண்பாட்டு அமைப்பின் சார்பாக ஔவையாரின் பொன்மொழிகளான ஆத்திசூடி-கொன்றைவேந்தன் மனப்பாடப் போட்டிகளையும் பேச்சுப் பேட்டிகளையும் பல வருடங்களாக நடத்தி வருகிது. இந்த வருடமும் அதை தொடர்ந்து நடத்தவேண்டும் என்பதற்காக **'ஔவை விழா'** என்ற தலைப்பில் 3-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை உள்ள சிறார், சிறுமிகளுக்கு **'மனப்பாடப் போட்டியும்'**, **'பேச்சுப் போட்டியும்'** நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அனைவரும் பங்கெடுத்து விழாவினை சிறப்பிக்க

அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி!

போட்டிகள் நடைபெறும் நாள் நேரம்:

**25.08.2019, ஞாயிற்றுக்கிழமை,**
**காலை 9 மணிமுதல்**

இடம்:

**ஸ்ரீ சங்கர வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி**
**கிழக்குத் தாம்பரம், சென்னை - 600 045.**

# தனலட்சுமி பொறியியல் கல்லூரி

**மணிமங்கலம், தாம்பரம், சென்னை**

CODE 1405

பாடப்பிரிவுகள்:

இளநிலை (பி.இ.)

**MECHANICAL, CIVIL, CSE, ECE, EEE**

**கல்லூரியின் சிறப்பு அம்சங்கள்**

வளாக கட்டமைப்பு: கல்லூரி வளாகம் பசுமைச் சூழலில் ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் தனித்தனி வளாக கட்டமைப்பை தன்னுள்ளே கொண்டுள்ளது.

**சிவனடியார்கள் குடும்பக் குழந்தைகளுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்.**



டாக்டர். **வி.பி.இராமமூர்த்தி.** பிஎச்.டி.
நிறுவனம் மற்றும் கல்லூரி தலைவர்
மேனாள் அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்

# தனலட்சுமி பொறியியல் கல்லூரி

டாக்டர். வி.பி.ஆர். நகர், மணிமங்கலம், தாம்பரம், சென்னை – 601 301, தமிழ்நாடு

**Ph : 9 283 283 283 / 72 9999 6789 / 98416 55959**
**044 - 71 700 801 / 803 / 2436 3321.**
**www.dce.edu.in**



**G. SIVAGAMASUNDARI**
**99940 89133**




**N. GURUMURTHY**
**99940 89140**

# SRI SASTHA CATERING



*We are Supplying Meals, Tiffin & Marriage Sear Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**

# திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்

14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,
லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: **9445121080, 7200935145**

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் மகம் நட்சத்திரத்தை முன்னிட்டு எல்லா மாதமும் வேளச்சேரி **அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதுதல்** நமது மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைபெறும் நாள் **02.08.2019 வெள்ளிக்கிழமை, 30.08.2019 வெள்ளிக்கிழமை மற்றும் 26.09.2019 வியாழக்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னம்பாலிப்பு நடைபெறும்.** அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

# திருக்கோயில் உழவாரப்பணி

**04.08.2019, ஞாயிற்றுக்கிழமை**
திருவலிதாயம் (பாடி)-யில் அமைந்துள்ள
**அருள்மிகு ஜெகதாம்பிகை அம்பாள்**
உடனுறை **திருவல்லீஸ்வரர் திருக்கோயில்**